மெட்ரோ ரெயிலில்

# 4 ஆயிரத்து 205 மாணவர்கள் பயணம்

## கல்வி சுற்றுலாவுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்

சென்னை, பிப்.22-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மெட்ரோ ரெயிலில் கல்வி சுற்றுலா பயணமாக சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து விமான நிலையம் மெட்ரோ ரெயில் நிலையம் வரை மாணவர்கள் இலவசமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அந்த வகையில் கடந்த நவம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை 4 ஆயிரத்து 205 மாணவர்கள் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்துள்ளனர். மேலும் கடந்த ஜூன் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை இதுவரை 24 ஆயிரத்து 400 மாணவர்கள், கல்வி சுற்றுலா பயணம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட தகவல் அனைத்து சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.